2018 மார்ச் 19]

போதுமானதாக இல்லை. அந்தப் பள்ளியின் மேற்குப் பகுதியில் சேதமடைந்துள்ள ஓட்டுக் கட்டடத்தை இடித்துவிட்டு மாடியுடன் கூடிய கூடுதல் வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டித் தர மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்செந்தூரில் இருக்கிற மேல்நிலைப் பள்ளியின் ஒரு பகுதி கூரைக் கட்டடமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு அந்தப் பள்ளியை நபார்டு திட்டத்தின்கீழ் இணைப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. அலெக்சாண்டர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

42—

துணை மின் நிலையம்

***5533—திரு. வீ. அலெக்சாண்டர்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதியில் 11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அம்பத்தூர் பகுதியில் புதிய துணை மின் நிலையம் வேண்டும்

என்று கேட்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் மண்ணூர்பேட்டையில் ஒன்றும், ஆவின் பால் பண்ணையின் அருகிலும் புதிதாக துணை மின் நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. அலெக்சாண்டர், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12–7–2017 அன்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் 33/11 கே.வி. துணை மின் நிலையம் ஜி.வி. ஐயர் தெருவில் அமைப்பது குறித்த வினா எழுப்பியிருந்தேன். 29–6–2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் 32 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தார். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலில்கூட ஜி.வி. ஐயர் தெருவில் அமையவிருக்கின்ற துணை மின் நிலையத்திற்காக காவல் துறையைச் சார்ந்த இடத்தை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்திருந்தார். காவல் துறைக்கு ஏற்கெனவே மின்சார வாரியத்திற்குச் சொந்தமான இடத்தை இராயபுரம் பகுதியிலே ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பணியை விரைந்து எடுத்து, அந்தப் பகுதி மக்களுக்குச் சீரான மின்சாரம் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே விவரத்தைச் சொல்லிவிட்டார்கள். ஏற்கெனவே காவல் துறைக்கு மின்சார வாரியத்தினுடைய இடத்தைக் கொடுத்திருக்கின்றோம். அதற்கு மாற்று இடமாக மின்சார வாரியத்திற்கு இடத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றோம். அதுகுறித்த கோப்பு சுற்றோட்டத்தில் இருக்கின்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், அருமை அண்ணன் அவர்கள் பேரவை விதி 110–ன்கீழ் 32 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று

2018 மார்ச் 19]

சொல்லியிருக்கின்றார்கள். மேலும், தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 132 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். பொதுவாக சென்னையைப் பொறுத்தவரையில் இடங்களைத் தேர்வு செய்வதுதான் மிகவும் சிரமமாக இருக்கின்றது. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும், துணை மின் நிலையங்கள் வேண்டும் என்று சொல்கிறார்கள். மின்சார வாரியமும் அதனை அமைப்பதற்குத் தயாராக இருக்கின்றது. ஆனால், அந்தந்தப் பகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் தேவையான இடத்தைத் தேர்வு செய்து தரவேண்டும் என்று நான் பலமுறை கேட்டிருக்கின்றேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் மின்னழுத்தம் சற்று குறைவாக இருக்கின்ற காரணத்தினால் துணை மின் நிலையம் வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சொல்லியிருக்கின்றார்கள்; அந்தப் பகுதி பொதுமக்களிடமிருந்தும் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அந்த அடிப்படையிலே, அதற்குண்டான பணியை வேகப்படுத்தி, துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் செயல் தலைவர் அவர்களை வணங்குகிறேன். செய்யூர் தொகுதிக்குட்பட்ட இடைக்கழிநாடு உள்ளிட்ட பேரூராட்சிக்கென்று ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டும். காரணம் அந்தப் பகுதி உப்புக் கழிவகம் நிறைந்த பகுதியாக இருப்பதால், மின் கடத்திக்காகப் பயன்படுத்துகின்ற அலுமினிய மின் இணைப்புகள் அடிக்கடி பழுதடைகின்றன. அந்தப் பகுதி இலகுவான மண்,* loose soil–*ஆக இருப்பதால் பேரிடர் காலங்களிலும், மழை மற்றும் காற்று வீசும் காலங்களிலும் மின் கம்பங்கள் அடிக்கடி சாய்ந்து விடுகின்றன. 21 வார்டுகளை உள்ளடக்கிய இப்பகுதியில் அடிக்கடி மின் தடை ஏற்படுகிற நிலை இருக்கிறது. ஆகவே, இந்த அரசு இடைக்கழிநாடு பேரூராட்சிக்கென்று தனியாக 33 கே.வி. துணை மின் நிலையம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய பகுதி loose soil–ஆக இருப்பதால் மின் கம்பங்கள் அடிக்கடி சாய்ந்து விடுகின்றன, அதனால், அந்தப் பேரூராட்சிப் பகுதியில் துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அந்தப் பகுதியில் குறைந்த மின் அழுத்தம் இருந்தால் துணை மின் நிலையம் அமைக்கலாம். ஆனால், மின் கம்பங்கள் சாய்ந்து விடுகின்றன என்று சொன்னால், அதற்கான ஆய்வுகளைச் செய்து சீரான மின்சாரத்தை வழங்குவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். துணை மின் நிலையம் தேவைப்பட்டால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதிதாக 132 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளதில், ஒரு துணை மின் நிலையம் அந்தப் பகுதியில் அமைப்பதற்கு இந்த அரசு உத்தேசிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

43—

பாதாள சாக்கடைத் திட்டம்

***6199—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் தெற்கு தொகுதிக்குட்பட்ட மாநகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?